# வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற ஜெயராஜதாஸ்

**சிறுவயதிலிருந்தே மாணவர்களின் மனத்தில் அழகுத் தமிழ்மொழியை ஆழமாக விதைக்கும் ஆசிரியர்களை ஆண்டுதோறும் கொண்டாடும் 'நல்லாசிரியர் விருது' நிகழ்ச்சியில் இவ்வாண்டு ஒன்பது ஆசிரியர்கள் சிறப்பிக்கப்பட்டனர். விருது பெற்ற ஆசிரியர்கள் தமிழை வாழும் மொழியாக நிலைநாட்ட தாங்கள் ஆற்றிவரும் பங்கு குறித்து தமிழ் முரசிடம் பகிர்ந்துகொண்டனர்.**

**யோகிதா அன்புச்செழியன்**

சிங்கப்பூரின் தமிழ்மொழி கல்வித் துறையில் தமது 44 ஆண்டுகால சேவையின் வழி ஆசிரியர் பணிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர் முனைவர் எஸ்.பி. ஜெயராஜதாஸ் பாண்டியன், 68.

சிங்கப்பூரில் முன்மாதிரியாகத் திகழும் மூத்த தமிழாசிரியர்களைச் சிறப்பிக்கும் நோக்கில் ஆண்டுதோறும் வழங்கப் படும் வாழ்நாள் சாதனையாளர் விருது இவ்வாண்டு முனைவர் ஜெயராஜதாஸ் பாண்டியனுக்கு வழங்கப்பட்டது.

தற்போது தேசியக் கல்விக் கழகத்தில் தமிழ்மொழியையும் நற்குணம், குடியியல் கல்வியையும் குழந்தைகளுக்கான இலக்கியத்தையும் கற்பிக்கும் பகுதி நேர விரிவுரையாளராகவும் கல்வி அமைச்சின் பாலர் பள்ளி பிரிவுக்கான வளவாளராகவும் (resource person) பணிபுரிந்துவரும் திரு ஜெயராஜதாஸ், தமிழ்மொழி பாடத்திட்டங்கள், கற்பித்தல் வளங்கள், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான முன்முயற்சிகள் ஆகியவற்றை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்து உள்ளார்.

தமிழ்மொழி கற்பித்தலில் இசையைப் பயன்படுத்துவதற்கு முன்னோடியாக

> ஆறு வயதில் நான் பாடத் தொடங்கியது அறுபது வயதில் முனைவர் பட்டம் பெற வழிவகுத்தது.
>
> **எஸ்.பி. ஜெயராஜதாஸ் பாண்டியன்**

திகழ்ந்த திரு ஜெயராஜதாஸ், சிங்கப்பூர்த் தமிழ் மாணவர்களுக்காக ஏராளமான கல்விப் பாடல்களை இயற்றி இசையமைத்துள்ளார்.

"கல்வி அமைச்சின் ஆதரவுடன் பாடநூல்களிலிருக்கும் சிறுவர் பாடல்களுக்கு நவீன இசையமைத்து, அவற்றைப் பள்ளிகளுக்குக் கொடுக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியது.

"இம்முயற்சி ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றது," என்று நினைவுகூர்ந்தார் திரு ஜெயராஜதாஸ்.

அந்த ஊக்கத்துடன், மாணவர்களுக்கு நன்னெறியைப் புகட்டும் நோக்கத்துடன் சிங்கப்பூரை மையமாகக் கொண்ட பாடல்களை அவரே சொந்தமாக எழுதவும் ஆரம்பித்தார்.

சிறப்பு எழுத்தாளர், திட்ட இயக்குநர், மூத்த பாடத்திட்டச் சிறப்பாய்வாளர், துணைத் தலைமை ஆசிரியர், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் மேற்பார்வையாளர், தலைமை முதன்மை ஆசிரியர் போன்ற பல்வேறு தலைமைத்துவ பதவிகளையும் இவர் வகித்துள்ளார்.

வாழ்நாள் கற்றலில் முழு நம்பிக்கை கொண்டுள்ள திரு ஜெயராஜதாசுக்கு வயது ஒரு தடையில்லை.

50 வயதில் பாடத்திட்டம், கற்பித்தல், கற்றலில் முதுகலைப் பட்டமும் பின்னர் 60 வயதில் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி, இலக்கியத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்.

"ஆறு வயதில் நான் பாடத் தொடங்கியது அறுபது வயதில் முனைவர் பட்டம் பெற வழிவகுத்தது," என்றார் திரு ஜெயராஜதாஸ்.

"கற்றல் என்பது எங்கும் எப்போதும் நிகழக்கூடியது. மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்போது, பாடக் குறிப்புகளை மட்டும் சொல்வது போதாது.

"இன்றைய காலகட்டத்தில், ஊடகம், தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றைப் பயன்படுத்தி மாணவர்களுக்குக் கற்பிப்பதோடு, நாமும் தொடர்ந்து புதியனவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும்," என்றார் திரு ஜெயராஜதாஸ்.

தேசியக் கல்விக் கழகத்தில் 1980ல் பட்டப்படிப்பை முடித்தபோது சிறந்த கற்பித்தல் திறனுக்கான விருதையும் இரு



வாழ்நாள் சாதனையாளர் விருதுபெற்ற முனைவர் எஸ்.பி. ஜெயராஜதாஸ் பாண்டியனுடன் (இடது) உள்துறை, சட்ட அமைச்சர் கா. சண்முகம். **படங்கள்: பே.கார்த்திகேயன்**

மொழித் திறன் விருதையும் பெற்ற திரு ஜெயராஜதாஸ், 'பிஎஸ்21 ஸ்டார் சர்வீஸ் எக்சலன்ஸ் விருது', சிறந்த கருத்தாக்க விருது (Best Ideater Award), 2012 தேசிய தின விருதுகளில் பாராட்டுப் பதக்கம் (Commendation Medal), கல்வி அமைச்சு தமிழ்மொழி ஆசிரியர்களுக்கிடையில் முதன்முறையாக வழங்கிய 'மறைமுக நாயகன்' ஆகிய விருதுகளையும் பெற்ற சிறப்பிற்குரியவர்.

"வாழ்நாள் சாதனையாளர் விருதை ஒரு தனிமனிதனாகச் செயல்பட்டு பெற்றிருக்க முடியாது. பலரின் ஆதரவும், ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் இருந்ததால் மட்டுமே இது சாத்தியமாகியுள்ளது," என்று நன்றிப்பெருக்குடனும் நெகிழ்ச்சியுடனும் சொன்னார் முனைவர் ஜெயராஜதாஸ் பாண்டியன்.

## விளையாட்டுவழி தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விருது

ஒவ்வொரு குழந்தையாலும் கற்றுக்கொள்ள முடியும், அவர் களுக்குக் கற்றுக்கொள்வதில் விருப்பமும் உண்டு என்பதை உறுதியாக நம்புகிறார், தொடக்கப் பள்ளிப் பிரிவில் சிறந்த தமிழாசிரியர் விருதுபெற்ற திருவாட்டி வீரராஜூ தேவிகா, 62.

"கணினி, புதுமை, நாகரிகம் என்று தொழில்நுட்பத்தை நாம் கையாண்டாலும் நம்முடைய இந்திய மரபையும் பழக்க வழக்கங்களையும் என்றும் மறக்கக்கூடாது என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும்," என்றார் இவர்.

"விருது பெற்றது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது. இவ்விருதை என் மாணவர்களுக்கும் பள்ளிக்கும் தாயாருக்கும் சமர்ப்பிக்கிறேன். அதே சமயத்தில், கற்பித்தல் என்பதை நான் ஒரு விருதாகப் பார்க்கவில்லை. அது வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒன்று என நான் நம்புகிறேன்," என்றார் திருவாட்டி தேவிகா.

காலப்போக்கில் மொழி கற்றலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தம்மை மாற்றியமைத்துக் கொள்வதோடு, தம் மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவதற்கான ஆக்கபூர்வமான வழிகளைத் தொடர்ந்து கண்டுபிடித்து வருகிறார் தொடக்கப் பள்ளி பிரிவுக்கான சிறந்த தமிழாசிரியர் விருதுபெற்ற திருவாட்டி ஜெயசுதா விஜய குமாரன், 48.

"நல்லாசிரியர் விருது கிடைத்திருப்பது, இத்தனை காலமாக மாணவர்களின் தமிழ்ப் புழக்கத்தை மேம்படுத்த நான் மேற்கொண்ட முயற்சிகளை நினைத்துப் பார்க்க ஒரு வாய்ப்பாக




தொடக்கப் பள்ளிப் பிரிவில் சிறந்த தமிழாசிரியர் விருதுபெற்ற (இடமிருந்து) திருவாட்டி சாரதா ராமன், திருவாட்டி ஜெயசுதா விஜய குமாரன், திருவாட்டி வீரராஜு தேவிகா.

அமைந்தது," என்றார் திருவாட்டி ஜெயசுதா. தம்முடைய முன்னாள் மாணவர்கள் பலரும் தமிழாசிரியராக பணிபுரிவதாகத் தெரிவித்த அவர், அதில் மிகவும் பெருமை கொள்வதாகக் கூறினார்.

ஆசிரியர் மாணவர்களுடன் கொண்டுள்ள வலுவான உறவையும் அவர்களது தன்னம்பிக்கையையும் வளர்க்கும் ஒரு சூழலை உருவாக்கினால் அது அவர்களைத் தமிழ்மொழியை விருப்பத்துடன் கற்க ஊக்கப்படுத்தும் என்று நம்புகிறார் தொடக்கப்பள்ளி பிரிவுக்கான சிறந்த தமிழாசிரியர் விருதுபெற்ற உட்குரோவ் தொடக்கப்பள்ளி தமிழாசிரியர் திருவாட்டி சாரதா ராமன், 54.

விருதைச் சற்றும் எதிர்பார்க்காத திருவாட்டி சாரதா, அதனை ஒரு பெரிய அங்கீகாரமாக கருதுகிறார். "என்னுடைய பள்ளியில் பணிபுரிகின்ற மற்ற ஆசிரியர்கள், துறைத் தலைவர்கள், மாணவர்கள், பெற்றோர் அனைவரும் என் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை இவ்விருது காட்டுகிறது," என்றார் அவர்.

## நவீன முறையில் தமிழ் புகட்டும் நல்லாசிரியர் விருது வென்ற ஆசிரியர்கள்

மாறிவரும் காலத்திற்கு ஏற்றவாறு தமிழ்மொழி கற்பித்தலும் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று நம்புகிறார் உயர்நிலைப் பள்ளிப் பிரிவில் சிறந்த தமிழாசிரியர் விருதுபெற்ற திரு சேதுராமன் ரமேஷ் ராஜா, 44.

பூன் லே உயர்நிலைப்பள்ளியில் தற்போது தமிழ் ஆசிரியராகப் பணிபுரியும் இவர், இந்தியாவில் ஏழு ஆண்டுகளாகத் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்ததைத் தொடர்ந்து, கடந்த 13 ஆண்டுகளாக சிங்கப்பூர்க் கல்வித்துறையில் பணியாற்றி வருகிறார்.

"இவ்விருது கிடைத்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. இது ஓர் ஆசிரியராக என்னுடைய மாணவர்களின் கற்றலைத் தொடர்ந்து மேம்படுத்தவும் பணியில் மேலும் சிறப்பாகச் செயல்படவும் ஊக்கமளிப்பதாக உள்ளது," என்றார் திரு ரமேஷ்.

விருதுபெற்ற மற்றொருவர் டெயி உயர்நிலைப்பள்ளி மூத்த ஆசிரியரும் தமிழ்மொழி ஒருங்கிணைப்பாளருமான திருவாட்டி ஜைனுல் பானு ஷாகுல் ஹமீட், 34.

"மாணவர்கள் வகுப்புக்கு வரும்போதே அவர்களுடைய நிலையை அறிந்து அதற்கேற்றாற்போல் தேவையான அறிவைப் புகட்டுவது முக்கியம்," என்றார் அவர். தேசியக் கல்விக் கழகத்தால் நடத்தப்பட்ட பலதரப்பட்ட தமிழ்மொழிக் கற்பவர்களுக்கான ஆழ்ந்த வாசிப்பு தொடர்பான ஆய்வு ஒன்றிலும் அவர் பங்கேற்றார்.

பாரம்பரிய கற்பித்தல் முறைகளுடன் நவீன கற்பித்தல் முறைகளையும் இணைத்து தமது மாணவர்களுக்கு தகுந்த கற்றல் சூழலை உருவாக்குகிறார் உயர்நிலைப் பள்ளிப் பிரிவில் சிறந்த தமிழாசிரியர் விருதுபெற்ற திருவாட்டி மலர்விழி பெருமாள், 60.

கடந்த 36 ஆண்டுகளாக கல்வித்துறையில் ஈடுபட்டு வரும் திருவாட்டி மலர்விழி, ஈசூன் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிகிறார்.

"மாணவர்களை வற்புறுத்தாமல், அவர்கள் விரும்பும் முறையில் பாடங்களை அவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக, இன்றைய மாணவர்கள் கைப்பேசிகளை அடிக்கடி பயன்படுத்துவதால், நகைப்பழிகை (Meme) அவர்களுக்கு நன்கு அறிமுகமானது. அதன் துணையுடன் பாடம் நடத்தும்போது அவர்களே ஆர்வத்துடன் வகுப்பில் கலந்துகொள்கிறார்கள்," என்றார் திருவாட்டி மலர்விழி.

பல்லாண்டு காலம் தாம் ஆற்றிய ஆசிரியர் பணியின் பயனாக இவ்விருது கிடைத்தது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது என்றார் திருவாட்டி மலர்விழி.



உயர்நிலைப் பள்ளிப் பிரிவில் சிறந்த தமிழாசிரியர் விருதுபெற்ற (இடமிருந்து) திருவாட்டி ஜைனுல் பானு ஷாகுல் ஹமீட், திரு சேதுராமன் ரமேஷ் ராஜா, திருவாட்டி மலர்விழி பெருமாள்.

## மொழி கற்றலில் தொழில்நுட்பத்தையும் பண்பாட்டையும் கற்பிக்கும் பயிற்சி ஆசிரியர்கள்



சிறந்த பயிற்சி ஆசிரியர் விருது பெற்ற திருவாட்டி ஜெம்பு கிருஷ்ணமூர்த்தி நளினி, 44.



சிறந்த பயிற்சி ஆசிரியர் விருது பெற்ற செல்வி பாவனா இராஜாராம், 23.

மாணவர்களை வகுப்பறைக்கு அப்பால் ஈடுபடுத்துவதன்மூலமும், தமது பாடங்களில் இருவழித்தொடர்புச் செயல்பாடுகளை இணைப்பதன்மூலமும் அவர்களுடன் வலுவான உறவுகளை உருவாக்கி வருகிறார் குவீன்ஸ்டவுன் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பது மாதங்களாகத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வரும் செல்வி பாவனா இராஜாராம், 23. இவருக்கு இவ்வாண்டின் சிறந்த பயிற்சி ஆசிரியர் விருது வழங்கப்பட்டுள்ளது.

"ஓர் ஆரம்பகால ஆசிரியராக சில சவால்களை நான் சந்தித்தாலும், பள்ளிக்குள் கால் எடுத்து வைத்த நாள் முதல் என் கையைப் பிடித்து உதவுவதற்கு நிறைய அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் இருப்பதால் என்னால் அவற்றை எதிர்கொள்ள முடிந்தது," என்று பகிர்ந்துகொண்டார் செல்வி பாவனா.

தமிழ்மொழி மற்றும் கல்வியியலில் இளங்கலை பட்டப்படிப்பை மேற்கொண்ட இவர், மாணவர்களின் ஈடுபாட்டை வளர்க்கும் வண்ணம் மொழி கற்றலில் தொழில்நுட்பத்தையும் பண்பாட்டையும் இணைத்து தமது பாடங்களை நடத்தி வருகிறார்.

"ஓர் இளம் ஆசிரியராக, மாணவர்களின் ஆர்வத்தை வளர்க்கும் விதத்தில் கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தி எனது பாடங்களை வடிவமைக்கிறேன்," என்றார் செல்வி பாவனா.

இவ்விருதை ஓர் உந்துதலாகப் பார்க்கும் செல்வி பாவனா, ஆசிரியர் என்ற நிலையைத் தாண்டி தம்முடைய மாணவர்களுக்கு ஒரு நல்ல தோழியாக இருந்து, பாடத்தைக் கற்பிக்க என்ன செய்யலாம் என்பதைப் பற்றி தற்போது சிந்தித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்.

சிங்கப்பூரில் தமிழ்மொழி கற்றலை வலுப்படுத்த தமது பண்பாட்டு அனுபவங்களுடன் ஆக்கபூர்வமான கற்பித்தல் முறைகளை இணைக்கிறார் சிறந்த பயிற்சி ஆசிரியர் விருதுபெற்ற திருவாட்டி ஜெம்பு கிருஷ்ணமூர்த்தி நளினி, 44.

இந்தியாவில் தமிழாசிரியராகப் பணிபுரிந்த திருவாட்டி நளினி, 2007ல் சிங்கப்பூருக்குக் குடிபெயர்ந்தார்.

இங்குத் தகவல் தொழில்நுட்பத் துறையில் சில ஆண்டுகள் பணியாற்றியபின், தம் பிள்ளைகளின் விருப்பத்திற்கேற்ப சிங்கப்பூரிலும் தமிழாசிரியராக பணிபுரிவது என 2022இல் முடிவெடுத்தார்.

தேசியக் கல்விக் கழகத்தின் ஆசிய மொழிகள் மற்றும் பண்பாட்டுத் துறை, பொங்கோல் நூலகத்தின் குழந்தைகளுக்கான மாதாந்தர நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு பங்களித்துள்ள திருவாட்டி நளினி, தமது கதை சொல்லும் திறனைப் பயன்படுத்தி பாடங்களில் படைப்பாற்றலை இணைத்துக் கற்பிக்கிறார்.

இவ்விருது தமது பணியில் மேலும் சிறப்பாகச் செயல்பட ஊக்கத்தையும் உந்துதலையும் தமக்கு அளித்துள்ளதாகத் திருவாட்டி நளினி கூறினார்.

yogitaa@sph.com.sg